**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**D051 தமிழகக் கலைகள்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. மதுரையின் அகழி குறித்து இடம் பெற்ற நூல் எது?
2. வேந்தர்க்குக் கடன் எனப் புறநானூறு எதனைக் கூறுகிறது?
3. திருவெள்ளறையில் உள்ள குளத்தின் வடிவம் யாது?
4. பல்லவர்காலம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
5. ஐயனார் யார்?
6. கழுகுமலை வெட்டுவான் கோயிலின் சிறப்புப் பெயர் யாது?
7. தக்ஷிணமேடு என அழைக்கப்படும் கோயில் எது?
8. கொடுமணல் அகழாய்வில் கிடைக்கப்பெற்றது எது?
9. மகேந்திரவர்ம பல்லவரின் சிறப்புப் பெயர் யாது?
10. மீனா முத்தைய்யா தனது ஓவியப் பள்ளியை எங்கு நிறுவினார்?
11. அப்பரின் தமக்கையார் யார்?
12. திருமுருக கிருபானந்த வாரியார் நடத்திய திருப்புகழ் இதழ் எது?
13. சீவக சிந்தாமணியில் குறிப்பிடப்பட்ட எழினி எது?
14. 'ஆடல்' என்பதன் வடமொழிச் சொல் யாது?
15. நையாண்டி மேளம் எந்த ஆட்டத்தின் பக்க இசையாகும்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. கலங்கரை விளக்கம் என்றால் என்ன? அது ஏன் அமைக்கப்பட்டது?
2. ஆலயம் என்பதன் பொருள் யாது?
3. மனித இன வரலாற்றை எத்தனை வகைகளாகப் பிரிப்பர்?
4. தமிழில் ஏழிசை என அழைக்கப்படுபவை எவை?
5. கூத்தின் வகைகளை எடுத்துக் கூறு?
6. பரத நாட்டியத்தின் அமைப்பு முறை எத்தனை? அவை யாவை?
7. வீரக்கல் எனப்படுவது யாது? அது எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
8. நாட்டுப்புற ஆடல்களில் சிலவற்றைக் குறிப்பிடுக.

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பல்லவர்காலக் கற்கோயில்கள் குறித்துக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) சமணப் பள்ளி ஓவியங்கள் குறித்து விளக்குக.

2. (அ) ஆபிரகாம் பண்டிதரின் இசைத் தொண்டினை விவரி.

(அல்லது)

(ஆ) தற்கால நாடக முன்னோடிகள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) கூத்துக்கலையும் இலக்கியமும் குறித்து நிறுவுக.

(அல்லது)

(ஆ) கரகாட்டம் குறித்து விளக்குக.

❋ ❋ ❋